விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 25 ஜுலை 11 இதழ் 176
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 9-8-84

## யாழ். நகரில் நேற்று தொடர்ந்து கேட்ட பலத்த சத்தங்கள்!

### கச்சேரி ஊழியர்கள் நண்பகலுடன் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க செயலக ஊழியர்கள் நேற்று நண்பகலுடன் சென்றுவிட்டனர். யாழ். நகரிலுள்ள மற்றும் அரசாங்க காரியாலங்களிலுள்ள ஊழியர்களும் நண்பகலுடன் சென்றுவிட்டனர்.

யாழ். மாநகரசபை ஊழியர்களும் நண்பகலுடன் சென்றுவிட்டனர.

நண்பகல் யாழ். நகரில் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்த சத்தங்களைக் தொடர்ந்து பதட்டம்நிலவியது, இதனால்ஊழியர்கள் மதில்களால் ஏறிவிழுந்தும் சென்றார்கள் எனக்கூறப்படுகிறது.

இவர்கள் பிரதான வீதிகளுக்கோ, பஸ் நிலையத்திற்கோ செல்லாது ஒழுங்கைகளினாலும் குறுக்குப்பாதைகளினாலும் வீடுகளுக்கு சென்றதாகக் கூறப்படுகிறது.

சைக்கிளில் வந்தவர்களும் சைக்கிளை காரியாலயத்தில் விட்டுவிட்டு நடந்துசென்றனர். சிலர் தங்கள் காரியாலயத்திற்கு அருகில் உள்ள வீடுகளில் தங்கிவிட்டனர். (க)

★ நான்காவது நாளாக யாழ்ப்பாணம் நேற்றும் முடங்கிக்கிடந்தது

# பொருட்களை வாங்கமுடியாது மக்கள் திண்டாட்டம்!

## பரீட்சார்த்திகளும் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் நேற்று நான்காவது தினமாக கடைகள்யாவும் மூடப்பட்டிருந்ததாலும், சந்தைகள் மூடப்பட்டிருப்பதாலும், பொதுமக்கள், பாவனைப்பொருட்களை பெறமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. நான்கு தினங்களாக பஸ் சேவைகள் ஒழுங்காக நடைபெறாததினால் போக்குவரத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.**

நேற்றுக்காலையில் யாழ் நகரில் ஏற்பட்ட பதட்ட நிலையைத் தொடர்ந்து மக்கள் தங்கள் வீடுகளிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலைஏற்பட்டது.

நேற்றும், வர்த்தக நிலையங்கள், கடைகள், எதுவும் திறக்கப்படவில்லை. தனியார் ரியூட்டரிகள் மூடப்பட்டிருந்தன. தியேட்டர்களில் சினிமாக் காட்சிகள் நடைபெறவில்லை.

வ. போ. ச. பஸ் சேவை நடைபெற்ற போதிலும், பிரயாணிகள் ஒரு சிலரே காணப்பட்டனர். மினிபஸ்கள், டாக்ஸிகள் எதுவும் சேவையில் ஈடுபடவில்லை,

யாழ். அரசினர் ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பகுதிக்கு, நோயாளர்கள் மிகக்குறைவாகவே வந்திருந்தனர். யாழ். பஸ் நிலையமும், வீதிகளும், நேற்றுக் காலை முதலே வெறிச் சோடிக்கிடந்தன.

### பரீட்சார்த்திகள் பாதிப்பு

ஜி. ஸி. ஈ. (உயர்தர) பரீட்சை மண்டபத்திற்குச் செல்ல முடியாமல் பரீட்சார்த்திகள் கஷ்டப்பட்டனர். சில பரீட்சார்த்திகள் ஒழுங்கை வழியாகவும், குறுக்குப் பாதைகள் வழியாகவும் நடந்துசென்றனர்.

யாழ். பஜாரிலுள்ள மொத்த

(5ம் பக்கம் பார்க்க)

## வல்வை அகதிகளை 'சிவா' பார்வையிட்டார்

### ஜனாதிபதியுடன் தொடர்பு

[கரவெட்டி]

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறைக்கு விஜயஞ் செய்து பல்வேறு இடங்களையும் சென்று பார்வையிட்டார்.

வல்வெட்டித்துறையில் சுமார் 5 ஆயிரம் பேர் அகதிகளாகியுள்ளதாகத் திரு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

பின்னர் அவர் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியுடன் தொடர்புகொண்டார். இப்போதும் சில வீடுகள் எரிந்துகொண்டிருப்பதாக அவர் அமைச்சரிடம் தெரிவித்ததாகக் கூறினார்.

திரு. சிவசிதம்பரம் ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவுடனும் தொடர்புகொண்டார்.

வல்வை மகளிர் கல்லூரியில் உள்ள இராணுவ முகாமை வாபஸ்செய்யுமாறு அவர் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

## வேலை தேடிச் சென்றவர்கள்

# இராமேஸ்வரம் வழியாக நாடு திரும்பினார்கள்!

### பம்பாயில் ஏஜன்ஸிகாரர் பாஸ்போர்ட்டுகளுடன் தலைமறைவு

[மன்னார்]

இலங்கையிலுள்ள ஏஜென்ஸி மூலம் வெளிநாட்டில் வேலை தேடிச்சென்ற 17 பெண்கள் பம்பாயில்வைத்து ஏமாற்றப்பட்டதால் மீண்டும் இலங்கைக் குத் திரும்பிவந்தனர்.

இவர்கள் தலைமன்னார்-இராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாகக் கடந்த திங்கட்கிழமை இலங்கைக்குத் திரும்பிவந்தனர்.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:- கொழும்பு-பொறளையைச் சேர்ந்த சீரியலத்தா என்னும் பெண் ஒருவர் வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி 26 பெண்களிடம் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் ஒருலட்சத்து 30 ஆயிரம் ரூபாவைப் பெற்று 26 பெண்களையும் பம்பாய்க்கு அழைத்துச் சென்றார்.

அங்கு இந்த 26 பெண்களையும் ஒரு வீட்டில் தங்கவைத்து

(5ம் பக்கம் பார்க்க

## செய்தித் தணிக்கை

**அவசரகாலச் சட்டம் 14(1) விதிகளுக்கு அமையப்பின்வரும்விஷயங்களைப் பத்திரிகைகளில்பிரசுரிக்கராஜாங்க அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

**பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வன்செயல்கள்பற்றிய நடவடிக்கைகள்.**

**கொள்ளை, மற்றும் அரச, தனியார் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல்.**

**பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள், பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள்.**

**தேசிய ஒற்றுமையையும், சட்டத்தையும் அல்லது சமூகத்திற்குத் தேவையான விநியோகம், சேவைகள் போன்றவற்றைப் பாதிக்கக்கூடிய விஷயங்கள்.**

## ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு அமிர்தலிங்கம் கடிதம்

(கொழும்பு)

யாழ்ப்பாண பகுதிகளில் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் குறித்து ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு, தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

இந்தப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உடன்நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

வல்வெட்டித்துறை நிலைமை குறித்து விபரமாக இக்கடிதத்தில் அவர்குறிப்பிட்டுள்ளார்.

# தபால் பார்சல்களை ஏற்பதில் புதிய நடைமுறை!

(யாழ்ப்பாணம)

தபாலில் அனுப்பப்படும் சகல உள்ளூர், வெளியூர்ப் பார்சல்களும், அவற்றினுள் இருப்பனவற்றை வெளிப்படுத்துவதுடன் அவற்றை அனுப்புவோரின் அடையாளங்களைத் தெளிவாகக் காட்டியபின்னரே தபாலகங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இப்புதிய நடைமுறை உடனடியாகச் சகல தபாலகங்களிலும் அமுலுக்கு வந்துள்ளது இத்தகவலை யாழ்ப்பாணம் பிரதம தபால் அதிபர் வெளியிட்டுள்ளார். (கி)

## வரி விளம்பரம்

### தேவை

விற்பனை செய்வதற்குச் சகலவித பொருட்களும் தேவை, அவை புதியனவாயினும் அல்லது பழையவையாயினும் விபரங்களுக்கு முத்திரைகவருடன் விண்ணப்பிக்கவும்: கார்த்திகேசு ஏலவிற்பனை நிலையம் கோப்பாய். 1188

### புதிய நிர்வாகிகள்

[மட்டுவில்]

சாவகச்சேரி நகரசபையின் சுகாதாரத் தொழிலாளர் நலன் உதவிச் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. க கோணமுத்து, செயலாளர் திரு. மு. கோணமலை, பொருளாளர்! திரு. க. கோணமலை

ஐவர் கொண்ட ஒரு நிர்வாகக் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

## இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 25 (1984-08-09)
வாரம்- வியாழன்
திதி-திரயோதசி முன்இரவு 7-41வரை
நட்சத்திரம்- பூராடம் பிற்பகல் 3 மணிவரை

மேடம்: அதிக ஆசையினுல் அவஸ்தைப்படுவீர்கள், சிலர் வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ளலாம், சிலரின் குறுக்கு வழித்தலையீடு உங்கள கோபத்தைக கிளறிவிடும், அமைதி நன்று.

இடபம்: பெரிய இடத்துச் சிநேகம் இன்று ஏற்படலாம், சிலருக்கு ஆத்மீகப் பணிகளிலும் ஆர்வம் பிறக்கும், புதுவழிகளின் மூலம் பணம்கிடைக்கும், குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

மிதுனம்: மனையில் பூசல்கள் தோன்றிமறையும், தனிமையை விரும்புவீர்கள், தொழில்புரியும் இடத்தில் கண்துடைப்பு வேலைகள் நடைபெறும், பொறுமை நன்று.

கடகம்: அறிவாற்றலை வளர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பீர்கள், புலவர்கள் போற்றப்படுவார்தள், நல்லநாள்.

சிங்கம்: கலை உலகம் சம்பந்தப்பட்டவர்களுக்குப் புகழ் பரவவும் சிலர் புதியவாகனத்தை கொள்முதல் செய்வதில் கவனம் செலுத்துவர், வாழ்க்கையில் வசந்தம் நிலவும்.

கன்னி: உறவாடி கெடுப்பதற்கு பகையாளிகள் வருவர், உற்சாகம் குன்றும் பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும், சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய்ஏற்படும்.

துலாம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் குடும்பப் பிரச்சனைகளில் சுமுகமானநிலை தென்படும், சுற்றுடலில் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும்.

விருச்சிகம்: ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் வேறுவிதமாக அமையக்கூடும், வந்துசேர வேண்டிய பணத்தில் மீண்டும் தடையேற்படலாம், திரைமறைவில் சூழ்ச்சிகளும் இடம்பெறும்.

தனுசு. புதிய நம்பிக்கையுடன் வாழ்க்கையை ஆரம்பிப்பீர்கள், தெய்வத்தின் அருளும் கிடைக்கும், சிலருக்குப் பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

மகரம்: புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும், கூட்டு வியாபாரத்தால் முன்னேற்றம் உண்டு, புதுமனை கட்டுவதில் சிலரது கவனம் திருப்பப்படலாம்,

கும்பம்: வணிகத்துறையில் புதிய வாய்ப்புகள் ஏற்படும், சொத்துவிவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும், புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும், பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும்.

மீனம்: துன்பத்தின் ரேகைகைகள் படரும், எதிலும் தயக்கம் ஏற்படும். ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும், கடன் தொல்லைகள் அதிகரிக்கலாம். நிதானம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## அரச அதிபருக்கு ஏற்பட்ட அனுபவம்

[மன்னுர்]

மன்னுர் அரசாங்க அதிபர் திரு.ஜெகா செந்தில்நாதனும், மன்னுர்க் கச்சேரி தலைமை அலுவலக அரசாங்க அதிபர் திரு. அருந்தவச் செல்வமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசாங்க அதிபரின் அலுவலகக் காரில் திருக்கேதீஸ்வரத்திலிருந்து மன்னுருக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

இவர்கள் தள்ளாடிச் சந்திக்கு வந்தபோது இவர்கள் வழிமறிக்கப்பட்டு, காரைச் சோதனையிடவேண்டும் கீழே இறங்குங்கள் எனக் கேட்கப்பட்டனர்.

இதற்குக் கச்சேரி தலைமை அலுவலக அரசாங்க அதிபர் மன்னுர் அரசாங்க அதிபரைக் காட்டி, ''இவர் மன்னுர் அரசாங்க அதிபர்; நாங்கள காரைவிட்டு இறங்கமுடியாது; வேண்டுமானுல் காரைச் சோதனையிடுங்கள்'' என்ருர். இதற்கு, ''யாராக இருந்தாலும் கீழே இறங்கவேண்டும். நாம் காரைச் சோதனையிட்ட பின் நீங்கள் காரில் ஏறலாம்'' என்று பதிலளிக்கப்பட்டது.

கச்சேரி தலைமை அலுவலக அரசாங்க அதிபர் காரைவிட்டு இறங்க முடியாதென்று மீண்டும் பதிலளித்தார்.

தொடர்ந்து அரை மணித்தியாலம் வரை இரு பகுதியினருக்குமிடையில் வாக்குவாதம் நடைபெற்றது.

இறுதிவரை அரசாங்க அதிபரும், கச்சேரி தலைமை அலுவலக அரசாங்க அதிபரும் காரைவிட்டுக கீழே இறங்கவில்லை. இதனையடுத்து அரசாங்க அதிபரின் கார் தீவிர பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது

இப்பரிசோதனையின் போது காரில் விபூதியும், சந்தனமும், பூவும், பாதித் தேங்காயுமே இருந்தன.

பரிசோதனை முடிந்ததும் அரசாங்க அதிபரின் கார் செல்ல அனுமதிக்கப்பட்டது.

மன்னுருக்குவந்த அரசாங்க அதிபர் முதலில் தள்ளாடி இராணுவப் பொறுப்பதிகாரியுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு தள்ளாடிச் சந்தியில் நடந்த சம்பவத்தைத் தெரிவித்தார். இதனைக் கேட்ட தள்ளாடி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி அரசாங்க அதிபரின் காரைச் சோதனையிட்ட இராணுவத்தினர்மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

தள்ளாடிச் சந்தியில் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்ட அரசாங்க அதிபரின் காரின் முன் கண்ணுடியில் அரசாங்க அதிபர் என்றுமூன்று மொழிகளிலும் தெளிவாக எழுதப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.


### தங்க நகைகளுக்கு பணவசதி

த பினன்ஸ் கம்பனி வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக தங்க நகைகளுக்கு பணவசதி வழங்க முன் வந்துள்ளது. உங்களுக்கு பணநெருக்கடி ஏற்படும்போது எம்முடன் கலந்தாலோசித்து தவணை முறையிலோ குறிப்பிட்ட கால எல்லையிலோ பணத்தை செலுத்தி உங்கள் தங்கநகைகளை திருப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

TFC
த பினன்ஸ் கம்பனி லிமிட்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680


## முல்லைத்தீவு மாவட்டத்தில்— —
## தெங்கு பனம்பொருள் அபிவிருத்திக்குமுட்டுக்கட்டை

(புலோலி)

சில தொழிலாளர்களின் நலன்களைப்பாதிக்கும் விதத்தில் முல்லைத்தீவுமாவட்டத் தெங்குபனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்களை ஒழித்துக்கட்டும் முயற்சியில் உயர்மட்டத்தில் சிலர் முயன்றுவருவதாக முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு தெங்குபனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்கள் இலங்கை பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. கே. நடராசாவிடம் புகார் செய்ததைத் தொடர்ந்து இந்நடவடிக்கையைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு திரு. நடராசா, நிதிதிட்டமிடல் அமைச்சர், கூட்டுறவுத்துறை அமைச்சர் ஆகியோரை அவசரதந்தி மூலம் கேட்டுள்ளார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு தெங்குபனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்களின் இப்புகாரைத்தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்குத் திடீர் விஜயத்தினை மேற்கொண்டிருந்த பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கூட்டமொன்றை நடாத்தியதுடன் குறைபாடுகளையும் நேரில்அறிந்து கொண்டார்.

கூட்டுறவுமுறையினுல் வளர்ச்சியும் ஒருசமுதாயத்தின் அபிலாசைகளுக்குமாக அரச அதிகாரிகள் செயற்படுவது பற்றியும் சட்டவிரோதமாக இடம்பெற்றுவரும் கசிப்பு உற்பத்திவிற்பனையையும் தடைசெய்வதற்கு எந்தவகையிலும்

(5-ம் பக்கம் பார்க்க)

### மரண அறிவித்தல்

#### முத்துக்குமாரு பார்வதிப்பிள்ளை

காலம்சென்ற தம்பிமுத்து முத்துக்குமாருவின் மனைவி பார்வதிப்பிள்ளை 7-8-84ல் காலமானுர். இவர் ராமேஸ்வரம், அன்னலட்சுமி, புஷ்பகாந்தி, சொர்ணகாந்தி, வாமதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், லீலா, சோமசுந்தரம், காலஞ்சென்ற பத்மநாதன், காலஞ்சென்ற நடராசா, ஸ்ரீகாந்தா ராமச்சந்திரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார் மானிப்பாய் சோதிவேம்படி ஒழுங்கையில் உள்ள இலகர் வளவில் அவரது இல்லத்திலிருந்து பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனக் கிரியைகள் நேற்று நடைபெற்றது. இத்தகவலை உற்ருர், உறவினர் நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும் 1260

### மரண அறிவித்தல்

#### திருமதி பரமேஸ்வரி நவரத்தினம்

[காலஞ்சென்ற முத்தையா தம்பதிகளின் மகள்]

அன்னுர் நவரத்தினம் [இலங்கை வங்கி இளைப்பாறிய சிருப்பர்] அவர்களின் அன்பு மனைவியும் சுசீலாதேவி, நிர்மலாதேவி, நந்தலாதேவி, விமலாதேவி, புஷ்பாதேவி, சிவகுமார், (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரலிங்கம் (கிளிநொச்சி), திருமதி பொன்னுத்துரை, திருமதி சபாரத்தினம், திருமதி விஜயநாதன், செல்வி ருக்குமணி, காலஞ்சென்ற திரு. மகாலிங்கம், திரு அமிர்தலிங்கம் [ஓமான்] ஆகியோரின் சகோதரியும் மாணிக்கவாகர், சிபாலசுந்தரம், சிவகுமாரன் ஆகியோன் மாமியாரும், கலைவாணி, ஹரிகரன். ஷாமிலா ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார் அன்னுரின் பூதவுடல் வீமன்காமம் தெல்லிப்பளை இல்லத்திலிருந்து நேற்றுப் புதன்கிழமை தெலிப்பளை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக்கிரியைகள் நடைபெற்றன. 1257

குறிப்பு: மேற்படி இரண்டு மரண அறிவித்தல்விளம்பரங்களும் தவிர்க்கமுடியாத காரணத்தினுல் நேற்றைய ஈழநாடு பதிப்பில் வெளிவரவில்லை. தவறுக்கு வருந்துகின்ருேம். — நிர்வாகி.

### இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எம். மயில்வாகனம் இம்மாதம் தொடக்கம் மல்லாகம் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை தலைமை அலுவலகத்தில் கடமையாற்றிய திரு எஸ்.ரி கதிரவேலுப்பிள்ளை பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### மானிப்பாய் லயன்ஸ் கழகம்

[பண்டட்தரிப்பு]

மானிப்பாய் லயன்ஸ் கழகம் என்ற பெயரில் புதிய லயன்ஸ் கழகம் ஒன்று விரைவில் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

### விரக்தியினுல் தற்கொலை

[மன்னுர்]

அடிக்கடி ஏற்படும் வியாதியினுல் விரக்தியடைந்த 55வயதுடைய பெண்மணி ஒருவர் கிருமிநாசினி அருந்தி மரணமானுர்.

மடு வீதியை அடுத்துள்ள மனுவரானயர் கட்டை அடம்பனைச் சேர்ந்த பெண்மணியே இவ்வாறு மரணமானவராவர்

இம் மரணம் தொடர்பாக மரண விசாரணை அதிகாரி ஜனுப். என். எம். அகமது லெப்பை தற்கொலை மரணம்

### கருத்தரங்கு பின் போடப்பட்டுள்ளது

கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தில் எதிர்வரும் சனிக்கிழமை (11-8-84), ''யாழ்ப்பாணத்தில் சைவசமயம்'' என்ற பொருளில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட கருத்தரங்கு பின்போடப்பட்டுள்ளது. அடுத்த திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

வண. S. S அருளம்பலம்

1262


கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

கொழும்பு ஸ்ருடியோ

# எழும்பூர் ரயில் நிலையத்தில் அனுமதேய பயமுறுத்தல்

(சென்னை)

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் குண்டு வெடிக்கப் போவதாக கிடைத்த அனுமதேய அச்சுறுத்தலை தொடர்ந்து பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

எழும்பூர் ரயில் நிலையத்தில் இருந்து செல்லும் ரயில்கள் அனைத்தும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே புறப்பட்டுச்செல்ல அனுமதிக்கப்படுகின்றன. பிரயாணிகளின் பொட்டிகள் உட்பட சகலதும் விரிவான சோதனை செய்யப்படுகின்றன.

## சுன்னுகம் சந்தை கூடவில்லை

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம் சந்தை நேற்றும் கூடவில்லை. கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை. பொதுமக்கள் நடமாட்டமும் குறைவாகவேகாணப்பட்டது.

## நெடுஞ்சாலைகள் புனரமைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- திருகோணமலை நெடுஞ்சாலை மன்னம்பிட்டியில் மழைகாலத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை தடைசெய்யும் பொருட்டு வெள்ளப்பெருக்கு ஏற்படும் நெடுஞ்சாலைகள் தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு தாழ்வான பகுதிகள் தாம் போதிமூலம் உயரமாக்கப்பட்டு வருகின்றது.

இ பகுதியில் ஏற்படும் வெள்ளப்பெருக்கினுல் மட்டக்களப்பிலிருந்து பொலநறுவை, திருமலை, மன்னுர், யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற தூரஇடங்களுக்கான போக்குவரத்து தொடர்புகள் முற்ருக சிலநாட்கள் துண்டிக்கப்படுவதுவழக்கம்.

## மட்டக்களப்பு யாழ்ப்பாணம் பஸ் சேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-யாழ்ப்பாணம் இ.போ.ச.பஸ் சேவைகளில் ஒரு சேவையை பருத்தித்துறை வழியாக நடத்த இ.போ.ச நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பிரயாணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது காலையில் இரு சேவையும், மாலையில் ஒரு சேவையும் சாவகச்சேரி வழியாக நடை பெற்றுவருகின்றன.

## விபுலானந்தர் இசைக்கல்லூரி அமைப்பு வேலைகள்

(மட்டக்களப்பு)

கடந்த பல மாதங்களாக இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்த மட்டகளப்பு விபுலானந்தர் இசை நடனக்கல்லூரியின் அமைப்பு வேலைகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச அபிவிருத்தி அமைச்சினுல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இக் கல்லூரி தற்போது விபுலானந்தர் மணி மண்டபத்தில் இயங்கி வருகின்றது.

# சென்னை விமானநிலையம்: பாதுகாப்பு பலப்படுத்தப்படடது

(சென்னை)

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் உட்பட இந்தியாவிலுள்ள சகல சர்வதேச விமான நிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலயத்தில் அண்மையில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மாநில உள்துறை செயலாளர் திரு. ரி. சி. வெங்கட்ராமன் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

யாழ். பரியோவான் கல்லூரி மாணவர்கள்

# தீயணைக்கும் படைக்கு நிதி வழங்கினர்

(அரியாலை)

யாழ். மாநகரசபை ஆணையாளரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தீயணைக்கும் படை நிதிக்கு யாழ். பரி.யோவான் கல்லூரி மாணவர்கள் பதினேழாயிரத்து நூற்றி இருபது ரூபாவை சேகரித்து வழங்கியுள்ளனர்.

கல்லூரி மாணவர்களிடையே செயல்படும் இன்ரக் கழகம் ஆயிரத்து முப்பது ரூபாவையும், ரியோ கழகம் நாலாயிரத்து இருநூற்றி ஐம்பத்தைந்து ரூபாவையும், சென்ற் யோன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினர் மூவாயிரத்து இருநூற்றி முப்பத்தைந்து ரூபாவையும், கடற்சாரணர் குழுவினர் இரண்டாயிரத்து நூற்றுப்பத்து ரூபாவையும், சாரணர்குழுவினர் ஆயிரத்து நாநூற்றுத் தொண்ணூறு ரூபாவையும் தனித் தனியாக சேகரித்து, கல்லூரி அதிபர் திரு. சீ. ஈ. ஆனந்தராஜன் மூலம் மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானத்திடம் கையளித்தனர்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட ஆணையாள மாணவர்களின் அரிய முயற்சிக்கு நன்றி தெரிவித்ததுடன் யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையத்தை மீளமைப்புச் செய்வதற்கு யாழ், பரியோவான் கல்லூரியின் அதிபரும், ஆசிரியர்களும், மாணவர்களும் காட்டிய பூரண ஆதரவுக்கும், ஒத்துழைப்க்கும் நன்றி தெரிவித்தார்.

## உறங்கலிருக்கை பெட்டிகள் இணைப்பு

(மட்டக்களப்பு)

கொழும்பு- மட்டக்களப்பு கொழும்பு- திருகோணமலை இரவுதபால் புகையிரதத்தில் கடந்த சில மாதங்களாக அகற்றப்பட்டிருந்த 2ம் வகுப்பு உறங்கலிருக்கை பெட்டிகள் தற்போது மீண்டும் இணைக்கப்பட்டுள்ளன.

## பண்ணையில் மீண்டும் மீன்சந்தை

(யாழ்ப்பாணம்)

பண்ணையிலுள்ள சந்தையில் நேற்று மீண்டும், மீன்சந்தை ஆரம்பமானது.

இம்மீன்சந்தையை கடந்த மாதம் 25ம் தேதி பொலிஸார். பொறுப்பேற்று 'கண்காணிப்பு நிலையம்' அமைத்தனர் நேற்றுகண்காணிப்பு இருந்தஇடத்தில் மீண்டும் மீன்சந்தை நடைபெற்றது (க)

# "ஆரோக்கியமான வாழ்வுக்கு கிராமிய மக்களுக்கு சுகாதார அறிவு வேண்டும்"

(கிளிநொச்சி)

''கிராமிய மக்களுக்கு சுகாதார அறிவு இல்லாத காரணத்தினுல் பல நோய்கள் ஏற்பட ஏதுவாகிறது. இவ்வாருனவர்களுக்கு ஆரம்ப சுகாதார அறிவைப் பரப்ப வேண்டியது அவசியமாகும். ஆரோக்கிய வாழ்விற்கு அடிப்படைச் சுகாதார வழிமுறைகளேயாகும்.''

இவ்வாறு தேசிய கசம்ரோகத் தடுப்புச் சபையின் கரைச்சிக் கிளையினுல் ஏற்பாடுசெய்யப்பட்ட கருத்தரங்கிற்குத் தலைமைதாங்கி உரையாற்றுதகயில் பரஸ்தாப சங்கத்தின் செயலாளரும் கிளிநொச்சிப் பகுதி சுகாதாரப் பரிசோதகருமான திரு. எஸ். இராசதுரை குறிப்பிட்டார்.

கனகாம்பிகைக்குளம் அரசினர் வித்தியாசாலை அரங்கில் இக்கருத்தரங்குநடைபெற்றது டாக்டர் கே.கே.வி. திருலோகமூர்த்தி தேசிய கயரோக தடுப்புச்சங்க கரைச்சிக்கிளை இணைச் செயலாளர் அ. தாமோதரம்பிள்ளை, ஆசிரியை திருமதி தில்லைநாயகம், ஞா.அருமைநாயகம், எஸ். பசுபதிப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினுர்கள்.

## அகதிமுகாமில் உண்ணுவிரதம்

(சாவகச்சேரி)

ஆடிக்கலவரத்தில் உயிர் துறந்த தமிழ் மக்களின் நினைவாக கைதடி அகதிகள் முகாமில்உண்ணுவிரதம் அனுஷ்டிக்கப் பட்டது.

காலை 7 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இவ் உண்ணுவிரதத்தின் போது விஷேட பிரார்த்தனைகளும்' பூசைகளும் இடம் பெற்றன. அறவழிப்போராட்டக்குழுத் தலைவர் திரு. வி. எஸ். துரைராஜாவினுல் மாலை 6 மணியளவில் முடித்து வைக்கப்பட்டு உண்ணுவிரதத்தின் முக்கியத்துவம் பற்றிய கருத்துரையும் வழங்கப்பட்டது.

## ★ ஒலிம்பிக் செய்திகள் ★

பதக்கப் பட்டியல்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 47 | 39 | 16 |
| ருமேனியா | 15 | 19 | 5 |
| சீனு | 13 | 6 | 5 |
| மே. ஜேர்மனி | 7 | 10 | 12 |
| ஜப்பான் | 7 | 4 | 8 |
| இத்தாலி | 7 | 2 | 5 |
| கனடா | 6 | 8 | 7 |
| ஆஸ்திரேலியா | 3 | 7 | 10 |
| பின்லாந்து | 3 | 1 | 2 |
| பிரிட்டன் | 2 | 3 | 11 |
| பிரான்ஸ் | 2 | 2 | 5 |
| நெதர்லாந்து | 2 | 2 | 4 |
| நியூஸிலாந்து | 2 | 0 | 1 |
| மெக்ஸிக்கோ | 1 | 2 | 1 |
| தென் கொரியா | 1 | 2 | 1 |
| பெல்ஜியம் | 1 | 1 | 2 |
| யூகோஸ்லாவியா | 1 | 0 | 3 |
| சுவீடன் | 0 | 5 | 4 |
| சுவிற்சலாந்து | 0 | 1 | 2 |
| டென்மார்க் | 0 | 1 | 1 |
| கிரேக்கம் | 0 | 1 | 1 |
| ஆஸ்திரியா | 0 | 1 | 0 |
| பிரேஸில் | 0 | 1 | 0 |
| கொலம்பியா | 0 | 1 | 0 |
| பேரு | 0 | 1 | 0 |
| நோர்வே | 0 | 0 | 1 |
| தாய்வான் | 0 | 0 | 1 |
| வெனசுவெலா | 0 | 0 | 1 |

# விலைமதிப்புள்ள முத்திரைகள் புழக்கத்தில் உள்ளன!

### அவதானமாக இருக்கும்படி தபால் மாஅதிபர் வேண்டுகோள்!

(சுண்டிக்குளி)

நாட்டில் விலைமதிப்புள்ள முத்திரைகள் புழக்கத்தில் இருப்பதாகவும், அவற்றில் பொதுமக்களும், தபால் ஊழியர்களும் மிக அவதானமாக இருக்கவேண்டும் எனத் தபால் மாஅதிபர் திரு. ஹப்புதெனிய விடுத்துள்ள சுற்றுநிரூபம் ஒன்றில் கேட்டுள்ளார்.

அதில் குறிப்பாக நூறு ரூபா, ஐம்பது ரூபா போன்றவையே மிகவும் அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். [கி]

உணவு போஷாக்கு வாரம்:

# கிளிநொச்சியில் நடமாடும் வைத்தியசாலை

[கிளிநொச்சி]

உணவுப்போஷாக்கு வாரத்தை முன்னிட்டு நடமாடும் வைத்தியசாலை ஒன்றைக் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தத் திட்டமிடல் பகுதியினரும், அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதனும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

உணவுப் போஷாக்கு வாரத்தைக் கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் விரிவான முறையில் கொண்டாட கிளிநொச்சி மாவட்ட உணவுப் பேஷாக்குத் திட்டக்குழு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. எதிர்வரும் அக்டோபர் 29-ம் திகதி முதல் நவம்பர் 2-ம் திகதிவரை நாடெங்கிலும் உணவுப் போஷாக்குவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளைத் திட்ட அமுலாக்கல் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட உணவுப் போஷாக்குக் குழுவின் தலைவராக அரசாங்க அதிபர் என். ஜெயநாதனும், செயலாளராகத் திட்டமிடல் அதிகாரி திருமதி பவானி சிறிஸ்கந்தராசாவும் தெரிவாகியுள்ளனர்.

இம்மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர் மத்தியில் கவிதை, கட்டுரை, சித்திரம், பேச்சு சுவரொட்டிச் சித்திரம் போன்ற போட்டிகளை நடத்தவும் வளர்ந்தோர் கல்வி, கருத்தரங்கு நடமாடும் வைத்தியசாலை ஆகியவைவற்றை நடத்தவும் கிளிநொச்சி மாவட்ட உணவுப்போஷாக்குக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

## விவசாயிகளுக்கு அதிகவருமானம்

(பண்டத்தரிப்பு)

இம்முறை பண்டத்தரிப்பு பகுதியில் புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு முன்எப்போதுமில்லாத வகையில் அதிகவருமானம் கிடைத்துள்ளது

அடிக்கடி ஏற்பட்ட வெள்ளத்திற்கு மத்தியிலும் அதிக பிரயாசை எடுத்து இந்தபுகையிலைச்செய்கையில் ஈடுபட்ட விவசாயி ஒருவரை ஆயிரம் புகையிலைக்கன்றுகள் 27 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்டது. மற்றொரு விவசாயியின் 400 புகையிலைக்கன்றுகள் ஒன்பதாயிரம் ரூபாவுக்கு விற்பனையானது.

## கடைகள் அகற்றப்பட்டன

[மன்னுர்]

மன்னுர் அரசாங்கஅதிபரின் உத்தரவையடுத்து தலைமன்னுர் துறை பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த பல கடைகள் அகற்றப்பட்டன


இக் கடைகளில் வியாபாரம் நடைபெருது மூடிக்கிடந்ததாலேயே அகற்றப்பட்டன [கி]

# ரின்ஸோ மேலும் அதிவெண்மைச் சலவை




**...ஏனெனில் ரின்ஸோவின் முழுமையான நுரை, ஒழிந்திருக்கும் அழுக்கை இழுத்து வருகிறது. இதோ இப்படித்தான்:**


1. உங்கள் அழுக்கு ஆடைகளை அப்படியே அரைமணிநேரம் ரின்ஸோவில் ஊறவிடுங்கள்.




2. ரின்ஸோவின் முழுமையானநுரை துணியின் ஒவ்வொரு துளையுள்ளும் ஆழமாக நுழைகிறது.



3. அதன் நுரை ஒழிந்திருக்கும் அழுக்குப் பகுதிகளை வளைத்துப்பிடித்து அவற்றின் இறுக்கத்தைத் தளர்த்துகிறது.



4. இப்பொழுதுநுரை அழுக்கைத்துணிகளின் மேற்பரப்புக்கு இழுத்துவருகிறது. எனவே துணிகளை மெய்யான தூய்மையும், மெய்யான வெண்மையுமாக்க சாதாரண தேய்த்தலொன்றே போதுமானது.






இப்போது ! அடித்துத் தேய்த்துக் களைக்கும் வேலைக்கு நீங்கள் முழுக்குப் போட்டுவிடலாம், ஏனெனில் ரின்ஸோவின் முழுமையானநுரை, உங்கள் கடின வேலைகளைத் தனதாக்கித் துணி களை மெய்யான தூய்மை, மெய்யான வெண்மையாக்குகிறது.

எங்கெங்கும் நவீன தாய்மார் ரின்ஸோ பாவிக்கத் தொடங்கியிருப்பதில் ஆச்சரியமில்லை!

விலை:
பெரியது — ரூ: 23.75
நடுத்தரம் — ரூ, 12.50
பக்கட் — ரூ: 2.40

## ரின்ஸோ, சலவைச் சிரமத்தை அறவே அகற்றுகிறது!

ஒரு தரமுயர்ந்த லீவர் உற்பத்தி.

ITL LB 1451

# கிளிநொச்சியில் தலைசிறந்த விளையாட்டு வீரர்

(கிளிநொச்சி)

''கிளிநொச்சிப் பகுதி விளையாட்டு வீரர்கள் தமது சுய முயற்சி மூலம் விளையாட்டுத் துறையில் முன்னேறி வருவது பெருமைக்குரிய விடயமாகும். இப்பகுதி விளையாட்டு வீரர்களுக்கு உரிய முறையிலான பயிற்சிகள் விளையாட்டதிகாரிகளால் கொடுக்கப்பட்டால் தலை சிறந்த விளையாட்டு வீரர்களாக இவர்கள் மாறமுடியும். இந்த வகையில் செயற்ப்பட்டால் கிளிநொச்சி மாவட்டம் விரைவில் விளையாட்டுத்துறையில் அபிவிருத்தியடையும்''

மேற்கண்டவாறுகிளிநொச்சி அருணோதய விளையாட்டுக் கழகம், கிளிநொச்சிப்பகுதி விளையாட்டுக் கழகங்களிற்கிடையே நடத்திய உதைபந்தாட்ட, கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் சமூக சேவையாளர் திரு. நாயகம் சிற்றம்பலம் குறிப்பிட்டார்.

பிரஸ்தாப கழகத் தலைவர் திரு. எஸ். செல்வரெத்தினம் தலைமையில் றெட்றிக்கோ அரங்கில் நடைபெற்ற இப் பரிசளிப்பு விழாவின் போது கிளிநொச்சிமாவட்ட செயலக உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். அமிர்தலிங்கமும் உரையாற்றினர்.

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
முத்துராமன்-காஞ்சனா
**காதலிக்க நேரமில்லை**
(ஈஸ்மன் கலர்- புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
**என் தம்பி**

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
BAD BLOOD
Action-Adults Only
திகிலூட்டும்மர்மச்சித்திரம்

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவகுமார்- ஜெய்சித்திரா
விஜயகுமார்
**பொண்ணுக்கு தங்கமனசு**

**வின்சர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.-சாவித்திரி
வீரப்பா - சந்திரபாபு
**மகாதேவி**
(புத்தம் புதிய பிரதி)

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சிவாஜி - பத்மினி
தேவிகா
**சரஸ்வதி சபதம்**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, —2-30,
4-30 — 7-00
Eye For An Eye

**றீகல்** (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
Terrence Hill ...
Bud Spencer ... in
"WHO FINDS A FRIEND FINDS A TREASURE"
[Latest Action - Comedy]

**லிடோ** யாழ். நகர்
Daily
10-30, 2-30, 4-45, 7-15
THE BURNING
(Strictly for Adults)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்-லதா நடித்த
**நவரத்தினம்**
(ஈஸ்மன் கலர்)

## இருல்பண்ணை

மன்னார்

மன்னாரில் சுமார் 40 ஏக்கரில் இருல் பண்ணை ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் இருல் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும். [கி]

## ரூபவாஹினி

மாலை

5-30 சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-00 'ஹியர்ஸ் பூமர்' (ஆங்கிலம்)
6-25 'அப் அன்ட் டவுண்' (ஆங்கிலம்)
6-40 சோவியத்திரைப்படம்
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 இசை நிகழ்ச்சி
7-45 தகவல் நிகழ்ச்சி

(சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 நாடகம் (சிங்களம்)
9-05 '56 வது ஒஸ்க்கார் திரைப்பட விருதுகள்'
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'ஒஸ்க்கார்' விருதுகள் [தொடர்ச்சி)
10-30 உலகச் செய்திகள்
10-35 ஒஸ்க்கார் விருதுகள்
11-00 நிகழ்ச்சிகள் முடிவு

## வீடுகளை இழந்தவர்களுக்கு நஷ்டஈடு

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் கடந்த 1983-ஆம் ஆண்டு டிசம்பர் மாதமும், 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதமும் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 2 ஆயிரம் குடும்பங்களுக்கும் 1983-ம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் சகாயவேலைகளில் ஈடுபட்ட 9600 குடும்பங்களுக்கும் இலவசமாக மீன்டின், பால்மா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. (கி)

## க.பொ.த.(உயர்தர)பரீட்சை:

# பாதுகாப்புக்கருதி புதிய நடைமுறை

(மாவிட்டபுரம்)

தற்சமயம் நடைபெற்று வரும் கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தர பரீட்சைகள் பாதுகாப்புக் கருதி புதிய முறை நடமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

மேற்படி பரீட்சை நடைபெறும் நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்க பாதுகாப்பு படையினர் முன்வராததால் கல்விப் பகுதியினர் புதிய முறையை நடமுறைப்படுத்தியுள்ளனர்.

காங்கேசன்துறை வட்டாரத்தில் பரீட்சை நடைபெறும் நிலையங்களுக்கு வழங்கப்படும் வினாத்தாள்கள் காங்கேசன் துறை பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டு சோதனை நடைபெறும் நேரத்தில் பரீட்சை மேற்பார்வையாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டு வழங்கப்படுகிறது.

இதனால் எவ்வித கஷ்டமுமின்றி பரீட்சை நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டது.

# ஒற்றுமையாக இருந்தால் சமுதாயம் முன்னேறும்"

(அரியாலை)

''ஒரு சமுதாயத்தில் எவ்வித பாகுபாடுமின்றி அனைவரும் ஒற்றுமையாய் இயங்கும் போதுதான் அச்சமுதாயம் முன்னேற்றமடைய முடியும். இதில் ஆண்கள் மட்டுமல்ல பெண்களின் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும். இந்த வகையில் வடபகுதியிலுள்ள சன சமூக நிலையங்களில் யாழ். கலைச்சுடர் சன சமூக நிலையம் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இவ்வாறு யாழ். உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட் கலைச்சுடர் சன சமூக நிலைய மேல்மாடித் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு அ. தங்கராசா தலைமையில் நடைபெற்ற மாடித் திறப்பு விழாவில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு கா மாணிக்கவாசகர் பேசுகையில், பொதுச் சேவை செய்வதற்குப் பலர் பின்நிற்கும் இக்காலத்தில் அரசின் மூலம் கிடைத்த உதவியைப் பயன்படுத்தி இம்மாடியைத் திறம்படக்கட்டி முடித்ததின்மூலம் கலைச்சுடர் சன சமூக நிலைய நிர்வாகிகள் பாராட்டுதற் குரியவர்களாவர் என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் கலைச்சுடர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உபதலைவி செல்வி ம. இந்திரகுமாரியும், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. த சிவப்பிரகாசமும் பேசினர்கள்.

சன சமூக நிலையச் செயலாளர் திரு. அ. ம. ரவீந்திரன் நன்றி கூறினார்.

## விண்ணப்பப் படிவத்திற்கு தட்டுப்பாடு

(அரியாலை)

வெளிநாட்டுக்குச் செல்கிறவர்கள் கடவுச்சீட்டு பெறுவதற்காக விண்ணப்பிக்கும் படிவங்களுக்குப் பெருந்தட்டுப்பாடு யாழ்ப்பாணத்தில் நிலவுகிறது.

யாழ்ப்பாணம் கச்சேரியில் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் விநியோகிக்கும் பகுதியில் விண்ணப்பப்படிவங்கள் முடிவடைந்து விட்டது என்ற அறிவித்தல் தொங்கவிடப் பட்டிருக்கிறது.

பிரத்தியேக கடைகளில் கூடிய விலைக்கு இவ்விண்ணப் பப்படிவங்கள் விற்பனை செய்யப்படுகிறது.

## மூவாயிரம் ரூபா நன்கொடை

(புலோலி)

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் கடமையாற்றி வன்செயல்கள் நடைபெற்றபோது காணமல் போன மூன்று பிள்ளைகளின் தந்தையான என் நவரத்தினராசாவின் குடும்பத்திற்கு அல்வாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினல் சேகரிக்கப்பட்ட பணத்தில் 3000/- ரூபா வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை செட்டித் தெருவைச் சேர்ந்த நவரத்தினராசா கடந்த ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல்களின் போது காணமல் போயிருந்தார்.

இவரது மனைவி மனோன் மணியிடம் அல்வாய் மேற்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் சார்பில் வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலும் 3000 ரூபாவையும் கையளித்தார். (கி)

## ஆங்கிலதினவிழா

(வவனியா)

வவனியா தமிழ் மகாவித்தியாலய ஆங்கில தினவிழா அண்மையில் வித்தியாலய ஐயாத்துரை மண்டபத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

விழாவிற்கு பாடசாலை அதிபர் திரு எஸ். சிவஞானம் தலைமை வகித்தார்.

வவனியா பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு.கி.பொ. சிவபாதம் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

## இராமேஸ்வரம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் பாஸ்போட்டுகளுடன் அவர் தலைமறைவாகி விட்டார்.

பலநாட்களாகியும் அவர் திரும்பாததால் வேலைதேடிச் சென்றபெண்கள் கவலையுற்றிருந்த வேளை இவர்களில் சிலரை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதற்குச் சிலர் முயற்சித்தனர். இதனால் வேலை தேடிச் சென்ற பெண்களில் 17 பேர் 52 நாட்களின் பின் பம்பாய் பொலிசில் புகார் செய்து, பொலிசாரின் உதவியுடன் இலங்கை தூதரகத்தின் மூலம் தற்காலிக பாஸ்போட்டுக்களைப் பெற்றுக் கொண்டு இலங்கைக்குத்திரும்பினர்கள். [கி]

## தெங்கு பனம்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் இக்கூட்டுறவுச்சங்கங்களால் பனை அபிவிருத்திச்சபைத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன.

இதுசம்பந்தமாக முல்லைத்தீவு அரச அதிபர் திரு. கே. ஞானச்சந்திரனையும் பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சந்தித்துபேச்சு வார்த்தைகளை மேற்கொண்டிருந்தார்.

# கிளிநொச்சி கல்வியில் முன்னேறவேண்டும்!

(கிளிநொச்சி)

'பின்தங்கிய பகுதியாகிய கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி முன்னேற்றத்தில் நான் பெரிதும் அக்கறை கொண்டு பணியாற்றி வருகிறேன். இம் மாவட்டம் கல்வியில் முன்னேற்றம் காணவேண்டும் என்பதுதான் எனது அபிலாசையாகும். இக்குறிக்கோள் விரைவில் நிறைவேறும்'

இவ்வாறு பரந்தன் கல்வி வட்டாரத்தில் உள்ள முரசுமோட்டை முருகானந்தா மாகாவித்தியாலயத்தின் ஆசிரியர் ஒன்றியத்தால் வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்து பதவி உயர்வு பெற்ற கல்வி அதிகாரி எஸ் தங்கராசா தமக்களிக்கப்பட்ட பாராட்டு வைபவத்திற்கு நன்றி தெரிவித்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

பிரஸ்தாய வித்தியாசலை அதிபர் எஸ். துரைராசா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. தணிகாசலம்பிள்ளை முருகானந்தா மகாவித்தியாலய உப அதிபர் ம. பத்மநாதன் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

## பொருட்களை.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விற்பனை நிலையங்கள் கடந்த நான்கு தினங்களாக மூடப்பட்டிருப்பதால் சில்லறைக் கடைகளில் உணவுப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சந்தைகள் வழக்கம்போல் கூடாததினால் மரக்கறி, கிழங்கு வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மக்கள் அரிசி, மா, சீனி, மீன் டின்கள் ஆகியவற்றை ஒற்றைக்கதவில் திறந்துள்ள கடைகளில் கூடியஅளவு வாங்கிச்சென்றனர்.

யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலும், உணவுக்கும், மரக்கறிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படும்என்றஅச்சம்தோன்றியுள்ளது.

இதேசமயம் வங்கிகள் இயங்காததினால், மக்கள் மத்தியில் பணப்புழக்கம் குறைந்து வருகிறது. வர்த்தகர்கள் கொழும்புக்குசென்று பொருட்களை கொள்முதல் செய்யமுடியாத நிலையில் இருப்பதால், தேவையான பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்கள் வழக்கம்போல் தொழிலிலுக்குச் செல்லாததால் மீன்களின்விலை அதிகரித்துள்ளது. சைக்கிளில் மீன்விற்பனை செய்வோரும் நேற்று விற்பனைக்கு செல்லவில்லை.

அரசாங்க காரியாலயங்களில் ஊழியர்கள் வழக்கத்திலும் பார்க்க குறைவாக வந்திருந்தனர், அரசாங்க காரியாலயங்களிலும் வங்கிகளிலும் வழக்கம் போல் நேற்று வேலைகள் நடைபெறவில்லை.

மக்கள் உணவுப் பொட்டலங்களை வாங்கி சேமிப்பதற்காக வீதிவீதியாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். எங்கு உணவுப் பொருட்கள் கிடைத்தாலும் வாங்கிச் செல்கின்றனர்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள ப.நோ.கூ., சங்ககிளைகளும் நேற்றுத் திறக்கப்படவில்லை. யாழ் ப.நோ.கூ.பிரதம சங்கத்திலிருந்து நேற்று முன்தினம் சில கிளைகளுக்கு மட்டுமே உணவு பொருட்கள் வழங்கப்பட்டன. ஊழியரும் தொழிலாளரும் வழக்கம்போல் வராததினால், மற்றும் கிளைகளுக்கு உணவுப் பொருட்கள் அனுப்பப்படவில்லையெனக் கூறப்படுகிறது. (க)

மணிவாக்கு

எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னேடு
உற்றேமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
—ஆண்டாள்

# நமதுநோக்கு

## இந்த நிலைமைக்கு முடிவு காண்க!

ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லை; ஆனல் யாழ்ப்பாணம் அடங்கினது மட்டுமல்ல காடு பத்திக் கிடக்கிறது.

குறிப்பாக நகரில் எந்த வீதியில் எந்நேரம் என்ன நடக்கும் என்பது தெரியாது மக்கள் அச்சமென்ற மறியற்சாலையில் தாமாகவே புகுந்திருக்கின்றனர். இக்காலத்தில் மரணப் பட்டியலில் இடம்பெற விரும்பும் மக்கள் சிலர். ''அறநனைந்தவருக்குக் கூதலுமில்லைக் குளிருமில்லை'' யென்ற விரக்தி நிலையில் வீட்டுக்கு வெளியே நடமாடுவதும் உண்டு.

ஒருநாட்டின் ஆட்சி அதில் வாழும் ஒருபகுதி மக்கள் சாதாரண பாதுகாப்புடன் வாழ வழிவகுக்க முடியாத நிலையில் எவ்வாறு மக்களின் விசுவாசத்தை எதிர்பார்க்க முடியும்?

நகரிலும் நாட்டிலும் பிரகடனப் படுத்தப்படாத 'போர்' ஒன்று தொடர்ந்து நடைபெறுமாயின் பொது மக்கள் வாழ்வு ஸ்தம்பித்து விடுவதை அரசு அவசரம் உணர்ந்து அதற்குரிய நடவடிக்கைகளை வல்லமையுடன் நிறைவேற்றவேண்டும்.

அவசியமின்றி யாழ்ப்பாண வீதிகளில் நடமாடும் மக்கள் அங்கொடைக்கே அருகதையில்லாதவர்கள் என்பதை யாரறியார்

எனவே 'அர்த்தமற்ற வேண்டுகோளைத் தவிர்த்து தவிர்க்கமுடியாத' போரை எதிர்த்து முறியடித்து மக்களைப் பரிபாலித்தல் ஆட்சியின் முதற்கடமை; இன்றேல் எங்கள் கதி என்ன?

அறம்பிழைத்து மறம் தலையெடுத்தால் அதற்குரித்தானவர் தெய்வ தண்டனையிலிருந்து தப்பமுடியாதென்பது தமிழ்மக்களின் என்றும் அழியாத நம்பிக்கை

இன்றைய அபாயநிலைமைக்கு அரசு தக்கவாறு முடிவுகாணவேண்டுமென்று மிக வினயத்துடன் கேட்கின்றேம்.

## வீரனுக்கு அஞ்சலி

பட்ட காலில் படுமென்பது உண்மைபோல் தெரிகிறது.

இன்று எமதுமக்கள் துயரக் கடலில் தத்தளிக்கும்போது, ''இந்தச் சாதனைமூலம், இலங்கைத்தமிழன்பெருமையை உலகறியச்செய்வேன் என்று கூறிய ஆழிக்குமரன் ஆனந்தன் மறைந்த செய்தி மக்களுக்கு ஒரு பேரதிர்ச்சியை உண்டாக்கி விட்டது.

'அதிகுளிர்மிக்க ஆங்கிலக் கால்வாயை' எந்தஒரு ஆசிய நாட்டவரும்நான்குதடவைகள் கடக்கும் முயற்சியில் இறங்கவில்லை.

உலக சாதனைகள் பல புரிந்து 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெற்ற அமரர் ஆனந்தனின் மறைவு வீர உலகுக்கே பேரிழப்பாகும்.

பல இடர்பாடுகளுக்கு இலக்காகி அவை எல்லாவற்றையும் முடித்து வெற்றிபெற்ற ஆனந்தன் இந்த இக்கட்டான சமயத்தில் இப்பெருஞ் சாதனையில் உயிரிழந்தசெய்தி தமிழ் கூறும் நல்லுலகத்தைமட்டுமல்ல வீரத்தைவந்திக்கும் அகில உலகிலுள்ள மக்கள் அனைவரையும் ஆழ்ந்த துயரில் ஆழ்த்தியிருக்கிறது.

பட்டதாரியும் சட்டத்தரணியுமான ஆனந்தன் கௌரவம்மிகுந்த குடும்பத்தின் தோன்றல். அதுமட்டுமல்ல யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை வாசி. இக்கட்டத்தில் மறைந்துவிட்டது இப்பகுதி மக்களுக்கு இன்று சோகத்தின் மேல் சோகமென்றல் மிகையாகாது.

''ஏஸியன் டைம்ஸ்'' குறிப்பிட்டதுபோல், ''உயர்வான லட்சியத்தை அடைவதில் துணிச்சலுடன் ஈடுபடவேண்டும்'' என்ற மறைந்த மகாவீரனின் இலட்சியம் எங்கள் இன்றைய இளஞ் சந்ததியினருக்கும் இனி வரவிருக்கும் பரம்பரைக்கும் என்றும் அழியா ஆசிச் செய்தியாகத் திகழவேண்டும்.

## 280 ஹஜ் யாத்திரிகர்களுடன் விமானம் கடத்தப்பட்டது!

தெஹ்ரான், ஆக. 8

ஈரானிலிருந்து 280 ஹஜ் யாத்திகர்களுடன் சவுதி அரேபியா சென்றுகொண்டிருந்த 'போயிங்' விமானமொன்று கடத்தப்பட்டது

இவ்விமானம் இன்று காலை பாஹ்ரெய்னில் தரையிறக்கப்பட்டது பின்னர் அங்கிருந்தும் எகிப்தின் கெய்ரோ நகரத்திற்குத் திசை திருப்பப்பட்டது தற்போது இவ்விமானம் பிரான்சுக்குக் கொண்டுசெல்லப்படுகிறது என்று கூறப்பட்டது.

அண்மையில் 'ஏயர் பிரான்ஸ் விமானமொன்று தெஹ்ரானுக்கு 58 பயணிகளுடன் கடத்திவரப்பட்டது, அக்கடத்தலைத் தொடர்ந்து ஆறு தினங்களின் பின்னர் மீண்டும் இவ்விமானக் கடத்தல் இடம் பெற்றுள்ளது.

கடத்தல்காரர்கள் பற்றிய விபரம் அவர்களது கோரிக்கைகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (கி)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

## இடம்பெயர்ந்த ஆசிரியர் பிரச்னை:

# ஓராண்டு காலமாகியும் தீர்வுகாணமுடியவில்லை!

## இ. தமிழர் ஆசிரியர் சங்கப் பிரமுகர்கருத்து

(பண்டத்தரிப்பு)

''பல்வேறு இன்னல்களின் மத்தியில் வேதனையினுல் வாடும் இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் பிரச்னையைத்தீர்த்து வைக்க எமது சங்கம் கடந்த ஓராண்டு காலமாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. சிலரின் தலையீடுகளினுலும், சில தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்பு போதியளவு கிடைக்காததாலும் இப் பிரச்னையில் தீர்க்கமான முடிவு எதையும் இதுவரை காணமுடியாதிருக்கின்றது. எனினும் கல்வி அமைச்சு அடுத்த தவணை ஆரம்பத்தில் இதுவிடயமாக சுமுகமானதொரு தீர்வை ஏற்படுத்தி இவர்களுக்கு நிவாரணம் வழங்கும் என்று நம்புகின்றேம்''

இவ்வாறு இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வட்டுக்கோட்டைக்கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சங்கத்தின் சிரேஷ்ட உதவி நிதிச்செயலாளர் திரு. எஸ். கே. சதாசிவம் குறிப்டார்.

சித்தன்கேணி கணேசவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு கிளைத்தலைவர் திரு. பொ. கந்தசாமி தலைமை வகித்தார்.

திரு. சதாசிவம் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் சங்கம் பேச்சுவார்த்தைகள் மூலமே பிரச்னைகளுக்கு தீர்வுகாண விரும்புகின்றதென்றும் இடப்பெயர்ந்த ஆசிரியர்களின் பிரச்னையைத்தவிர ஆசிரியர்களின் பதவி உயர்வு, சம்பள அதிகரிப்பு ஆகியனபற்றியும் கல்விஅமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா இக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது; ''ஆசிரியர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை மாணவர்களுக்குப்போதிப்பதுடன் நின்றுவிடாது இவற்றிற்கு முன்மாதிரியானவர்களாகவும் விளங்கவேண்டும். கல்வித் திணைக்களமும், ஆசிரியர்களும் அவர்களின் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து செயற்பட்டால்தான் கல்வித் துறையை முன்னேற்றமடையச் செய்யமுடியும். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வட்டுக்கோட்டைக் கிளையினர் எமது பிரிவில் ஒத்துழைத்துச் செயலாற்றிவருவது குறித்து மிகவும்மகிழ்ச்சியடைகின்றேன்.''

கிளையின் புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது தலைவராக பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. பொ. கந்தசாமி மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். செயலாளராகத் திரு. க. பரமலிங்கமும் பொருளாளராக திரு. த. கந்தையாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## இப்படியும் நடந்தது!

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்த இளைஞரின் சடலத்தைத் தனது மகனின் சடலமென அடையாளம் காட்டிய தாயார், சடலத்தை எடுத்துச்சென்று இறுதிக் கிரியை நடத்திக்கொண்டிருந்தபோது அவரது மகன் வீடு வந்து சேர்ந்தாராம்.

இந்தச் சம்பவம் ஏழாலை மேற்கில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 5ம் திகதி திருநெல்வேலிச் சந்தியில் இளைஞர் ஒருவரின் சடலம் தலையில் இரு துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் மின் கம்பத்தில் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது.

சுன்னுகம் பொலிசாருக்குத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து சடலத்தைப் பொறுப்பேற்று யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் விசாரணைக்காகக் கொண்டு வந்து சேர்த்தனர்.

அடுத்தநாள் ஏழாலை வடக்கைச் சேர்ந்த திருமதி முத்தம்மா இராசையா என்பவர் சடலத்தைப் பார்வையிட்ட பின், தன் மகன் இராசையா இரத்தினசிங்கம் (26 வயது) தான்இறந்துகிடப்பதாகஅடையாளம் காட்டினர். சடலத்தையும் பொறுப்பேற்று வீட்டுக்குக் கொண்டுசென்றுர்.

வீட்டில் இறுதிக் கிரியைகள் நடந்துகொண்டிருந்தபோது வீட்டாருக்குத் தெரியாமல் நெடுங்கேணி சென்றிருந்த மகன் அங்குவந்து சேர்ந்தார்.

இதனைத் தொடர்ந்து மரண வீட்டில் மகிழ்ச்சி ஆரவாரம் ஒலித்தது. (மா)

## காயங்களுடன் அனுமதிக்கப்பட்டனர்!

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசினர் ஆஸ்பத்திரிக்கு நேற்றுக்காலை வயிற்றில் பலத்த காயத்துடன் யாழ். மாநகரசபை களஞ்சியப் பொறுப்பாளரான கொக்குவிலைச் சேர்ந்த பத்மநாதன்[39 வயது] அனுமதிக்கப்பட்டார்.

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுக்காலை 5 பேர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டனர். திருமலையைச் சேர்ந்த செல்வராசா[45 வயது]மீசாலையைச் சேர்ந்த கந்தசாமி [35 வயது], கோப்பாயைச் சேர்ந்த இராயப்பு(50-வயது) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாலசிங்கம்[24-வயது] உடுவிலைச் சேர்ந்த சின்னத்துரை[40-வயது] ஆகியோரே காயங்களுடன் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் நேற்றுக்காலை பஸ் நிலையத்தில் நின்றபோதே காயமடைந்தனர்.

கந்தர்மடம் ஆத்திசூடி வீதியில் 60 வயது வயோதிபர் ஒருவரும் காயத்துடன் கிடக்கக் காணப்பட்டார். மற்றும் பலருக்குச் சிறுகாயங்கள் ஏற்பட்டு தனியார் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றுர்கள் எனக் கூறப்படுகிறது.

நேற்று நண்பகல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். சிவரத்தினம் (40 வயது) காயங்களுடன் அனுமதிக்கப்பட்டார். [க]

## மன்னாரில் இந்திய 'ஆப்பிள்' ரூ. 10!

[மன்னர்]

தலைமன்னர்- ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக தனியார் துறையினர் இந்திய உற்பத்திப் பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய ஆரம்பித்துள்ளனர்.

முதலாவது இறக்குமதி ஆரம்பமானது. இதில் பெருந்தொகையான ஆப்பிள் பழங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட அப்பிள் பழங்களில் ஒருபகுதி மன்னர் சந்தையில் ஒன்று பத்து ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டது.

## தான்ஸானிய மக்களுக்கென அரிசி, பணம் சேகரிப்பு!

### பருத்தித்துறையில் நடவடிக்கை

(புலோலி)

ஆபிரிக்காவிலுள்ள தான்ஸனியா போன்ற நாடுகளில் பட்டினியின் காரணமாக மரணத்தின் பயங்கரத்தை எதிர்நோக்கியிருப்பவர்களுக்கு தானம் வழங்குமுகமாக பருத்தித்துறைத் தொகுதி அம்பன் கமநலச் சேவை நிலைய பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களும் உடுப்பிட்டித் தொகுதி புலோலி கமநலச் சேவை நிலைய பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களும் பொது மக்களிடம் அரிசி, பணம் என்பன அண்மையில் சேகரிக்கப்பட்டது!

பட்டினியின் காரணமாக மரணத்தின் பயங்கரத்தை எதிர்நோக்கியிருப்பவர்கள் மீதுள்ள கருணையினுல் இலங்கை அரசாங்கம் சுமார் 500 தொன் அரிசியை அம்மக்களுக்கு தானம் செய்யவுள்ளதாகவும் கமத்தொழில் ஆராய்ச்சி அபிவிருத்தி அமைச்சரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான திரு காமினி ஜயசூரியா அறிவித்திருக்கின்றுர்.

மரண அறிவித்தல்

எஸ். ஆர். செல்லத்துரை
(S. R. S.)

யாழ்ப்பாணம் வர்த்தகரான காரைநகர்S.R. செல்லத்துரை காலமானர். இறுதிக்கிரியைகள் இன்று 9-8-84 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் காரைநகரில் நடைபெறும்.

1263